## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 127/2017**

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தமயந்தி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 9**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Dr.தாகூர் | தொழில் | :மருத்துவர் |
| தந்தை பெயர் | : அப்பாஜி | சமயம் | : |
| கிராமம் | : | சாதி | : |
| வட்டம் | : | வயது | : |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. அசோக்குமார் Gr.1 - 2511 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

**1.** நான் செஞ்சி அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து 2019 ம் வருடத்தில் ஓய்வு பெற்றேன். கடந்த 22.08.2015 ம் தேதியன்று செஞ்சி அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் இருந்த ராஜசேகர் வயது 25 த/பெ கந்தசாமி என்பவரது பிரேதத்தினை பிரேத கூராய்வு செய்து சான்று வழங்குமாறு அனந்தபுரம் காவல் நிலையத்தின் காவலர் எண்.1931 திரு. ஜெய்சங்கர் அவர்களின் மூலமாக விண்ணப்பம் பெறப்பட்டது. உடல் கூராய்வு மதியம் 12.00 மணிக்கு பிரேத பரிசோதனை ஆரம்பித்தேன். அப்போது உடலின்மீது காணப்பட்ட அங்க அடையாளங்கள் முறையே

1. வலது கண் அருகே தழும்பு
2. வலது முழங்கை பகுதியில் தழும்பு

**வெளிப்புற ஆய்வு:**

1. பிரேதம் மல்லாந்த நிலையில் படுக்க வைக்கப்பட்டிருந்தது.
2. பிண விரைப்புத்தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது.
3. கண்களும் வாயும் பாதியளவு திறந்த நிலையில் இருந்தன.

**வெளிப்புற காயங்கள்:**

1. வலது தொடைப்பகுதியில் எலும்பு முறிவு காணப்பட்டது.
2. இடது காலில் 10 x6 செ.மீ அளவில் சிராய்பு காயம் இருந்தது.
3. மார்பு பகுதியின் பின்பக்கத்தில் 5x 2 செ.மீ. அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது.

**உள் காயங்கள்.**

1. தலைப்பகுதியில் கபால எலும்பு முறிவுகள் காணப்பட்டன.

2. கபாலத்தின் உட்பகுதியில் ரத்த உறைவுகள் காணப்பட்டன.

1. கழுத்து பகுதியில் Hyoid எலும்பு முறிவு இல்லை.

2. மார்பு பகுதியில் விலா எலும்பு முறிவுகள் இல்லை.

3.நுரையீரல்கள் மற்றும் இதய பகுதிகளில் காயங்கள் இல்லை.

4. வயிற்று பகுதியில் இரைப்பை மற்றும் குடல் பகுதிகள் காற்றால் விரிவடைந்து காணப்பட்டன.

5. வலது சிறுநீரகம் மற்றும் கல்லீரல் உறுப்புகளில் கிழிந்த காயங்கள் இருந்தன.

6. வயிற்றின் உட்பக்கத்தில் 300 மி.லி அளவில் ரத்தம் இருந்தது.

7. வயிறு மற்றும் இடுப்பின் பிற உறுப்புகளில் காயங்கள் இல்லை.

பிணக்கூராய்வு பகல் 01.00 மணிக்கு முடிக்கப்பட்டது. உடம்பில் காணப்பட்ட காயங்கள் அனைத்தும் இறப்பிற்கு முன் ஏற்பட்டவை. மரணம் சம்பவித்த நேரம் பிரேத பரிசோதனை செய்த நேரத்தில் இருந்து தோராயமாக 13.00 மணி நேரம் முன்பாக மரணம் ஏற்பட்டது.

**இறப்பின் காரணம்**:

1.கபால எலும்பு முறிவுகள்

2. கபாலத்தின் உள்ளே ரத்தப்போக்கு ஏற்பட்டது.

3. கல்லீரல் வலது சிறுநீரகம் ஆகிய உறுப்புகளில் ஏற்பட்ட காயங்கள் வலது தொடை எலும்பு முறிவு ஆகியவற்றால் ஏற்பட்ட ரத்த போக்கு. மேற்கண்ட காரணங்களால் மரணம் ஏற்பட்டது. பிணக்கூராய்வு மேற்கொண்ட பிறகு அது சம்மந்தமான சான்றிதழை நான் வழங்கினேன். போலிசார் விசாரித்தார்கள்.

**4. 22.08.2015 தேதியிட்ட பிணக்கூராய்வு சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

## குறுக்குவிசாரணை:

**4.** என்னை போலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை.

**மறுவிசாரணை:**

**இல்லை**

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.